RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 192 ஜூலை.18 2026 சனிக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# "மனிதநேயம், நாட்டுப்பற்று கொண்ட புதிய சமுதாயத்தை உருவாக்குவோம்" தியாகிகள் நாளில் முதல்வர் விஜய் அழைப்பு

சென்னை: ஜூலை.18-

தியாகிகள் தினத்தை முன்னிட்டு அவர்களின் உயரிய பண்புகளை வாழ்வியல் நெறியாக ஏற்று, மனித நேயமும் நாட்டுப் பற்றும் கொண்ட புதிய சமுதாயத்தை உருவாக்கிடுவோம் என்று முதல்வர் விஜய் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் முக்கியப் பங்காற்றிய தியாகி ஆர்யா (எ) பாஷ்யம், தியாகி சங்கரலிங்கனார் மற்றும் தியாகி செண்பகராமன் ஆகியோரின் தியாகங்களைப் போற்றும் வகையில், தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் ஜூலை 17ல் தியாகிகள் தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இதையொட்டி, முதல்வர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், "இந்திய விடுதலைக்கும், மக்களின் உரிமை வாழ்விற்கும் தங்களது இன்னுயிரை ஈந்த தியாகி ஆர்யா (எ) பாஷ்யம், தியாகி சங்கரலிங்கனார் மற்றும் தியாகி செண்பகராமன் ஆகியோருக்கு தியாகிகள் தினத்தை முன்னிட்டு எனது வீர வணக்கங்கள்.





ஆங்கிலேயரின் அதிகாரச் செருக்கை வேரறுக்கும் வகையில், சென்னை புனித ஜார்ஜ் கோட்டைக் கொத்தளத்தில் பறந்த பிரிட்டிஷ் யூனியன் ஜாக் கொடியை இறக்கிவிட்டு, இந்திய மூவர்ணக் கொடியை ஏற்றிய மா வீரர் தியாகி ஆர்யா (எ) பாஷ்யம், நமது மாநிலத்திற்கு 'தமிழ்நாடு' என்ற பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காகத் தொடர் உண்ணா விரதமிருந்து இன்னுயிரை ஈந்த தியாகி சங்கரலிங்கனார், 'ஜெய் ஹிந்த்' என்ற முழக்கத்தை சுதந்திரப் போராட்டத்திற்கு அளித்து, இந்திய விடுதலைக்காக சர்வதேச ஆதரவைத் திரட்டிய, வீரத்தியாகி செண்பகராமன் ஆகியோரின் அயராத உழைப்பும் தன்னலமற்ற தியாகமும் என்றென்றும் போற்றத்தக்கது.

இத்தகைய தியாகிகளின் உயரிய பண்புகளை வாழ்வியல் நெறியாக ஏற்று, மனிதநேயமும் நாட்டுப்பற்றும் கொண்ட புதிய சமுதாயத்தை உருவாக்கிடுவோம்" என்று முதல்வர் விஜய் கூறியுள்ளார்.

## பிரதமர் இல்லத்தில் அமித் ஷா, நிதின் நவீன் அவசர ஆலோசனை

புதுடெல்லி, ஜூலை.18-

நாடாளுமன்ற மழைக் காலக் கூட்டத்தொடர் அடுத்த வாரம் தொடங்கவுள்ள நிலையில், பிரதமர் இல்லத்தில் பாஜக உயர் நிலைக் குழுவின் அவசர ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.



இதில் மத்திய அமைச்சர் அமித் ஷா, பாஜக தலைவர் நிதின் நவீன் உள்ளிட்ட மூத்த தலைவர்கள் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் என்ன விவாதிக்கப்பட்டது என்பது குறித்த அதிகாரப்பூர்வ விவரங்கள் வெளியாகவில்லை.

எனினும், பாஜக தேசிய நிர்வாகிகள் மற்றும் மத்திய அமைச்சரவையில் மாற்றம் செய்யப்படலாம் என்ற பேச்சு நிலவும் சூழலில் இக்கூட்டம் நடந்துள்ளது. இதற்கிடையே, கூட்டணிக் கட்சிகளின் நாடாளுமன்ற வியூகம் குறித்து விவாதிக்க, தேசிய ஜனநாயகக் கூட்டணியின் (என்டிஏ) ஆலோசனைக் கூட்டம் வரும் ஜூலை 21ல் நடைபெறவுள்ளதாகத் தெரிகிறது.

சோனியா, ராகுல்: மறுபுறம், சோனியா காந்தியின் '10, ஜன்பத்' இல்லத்தில் காங்கிரஸ் மூத்த தலைவர்களின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி, ப.சிதம்பரம், சசி தரூர் உள்ளிட்டோர் பங்கேற்ற இக்கூட்டத்தில் நாடாளுமன்ற வியூகங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, எதிர்க்கட்சிகளின் 'இண்டியா' கூட்டணியும் வரும் திங்கட்கிழமை கூடித் தங்களின் கொள்கையை வகுக்கவுள்ளது.

நீட் வினாத்தாள் கசிவு, அயோத்தி ராமர் கோயில் நன்கொடை முறைகேடு புகார், எரிபொருள் விலை உயர்வு மற்றும் இந்தியாஅமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம் ஆகிய பிரச்சினைகளை எழுப்பி மத்திய அரசுக்கு நெருக்கடி கொடுக்க எதிர்க்கட்சிகள் தயாராகி வருகின்றன. இதற்கிடையே, கூட்டத்தொடர் சுமுகமாக நடைபெறுவது குறித்து விவாதிக்க மத்திய அரசு வரும் ஞாயிற்றுக் கிழமை அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டியுள்ளது.

இந்நிலையில், பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரம் வழங்கல் துணை இணை அமைச்சர் ராம்தாஸ் அதவாலே நேற்று தெலங்கானா மாநிலம் ஹைதராபாத்துக்கு வந்தார்.

அப்போது செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: கடந்த நாடாளுமன்ற கூட்டத் தொடரின்போது அரசியலமைப்பு சட்டத் திருத்த மசோதா உள்ளிட்ட மசோதாக்கள் காங்கிரஸ், சமாஜ்வாதி, திரிணமூல் கட்சிகளால் தோற்கடிக்கப்பட்டன. ஆனால் வரும் மழைக்காலக் கூட்டத் தொடரின்போது மகளிர் இடஒதுக்கீடு, தொகுதி மறுவரையறை மசோதா உள்ளிட்டவை நிறைவேற்றப்படும். நாடாளுமன்ற அவைகளில் எங்களுக்கு மூன்றில் 2 பங்கு மெஜாரிட்டி உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில், பிரதமர் மோடிக்கு காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே எழுதியுள்ள கடிதத்தில், "நாடாளுமன்ற கூட்டத்தொடரில் தொகுதி மறுவரையறை மசோதாவைத் தாக்கல் செய்ய வேண்டும் என்றால் அதுதொடர்பாக விரிவாக விவாதிக்க வேண்டும்" என்று வலியுறுத்தி உள்ளார்.

## காவல் மரணங்களில் தவறு செய்தவர்கள் மீது கடும் நடவடிக்கை: அமைச்சர் நிர்மல் குமார் உறுதி

சென்னை, ஜூலை.18-

காவல் மரணங்களில் தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சட்டத் துறை அமைச்சர் நிர்மல் குமார் தெரிவித்தார்.



இது குறித்து தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களிடம் நேற்று அவர் கூறியதாவது: காவல் மரணங்களில் போலீஸார் அல்லது சிறைத்துறை பணியாளர்கள் தவறு செய்திருந்தால் அரசு, அவர்கள் மீது சட்ட ரீதியாக கடும் நடவடிக்கை எடுக்கும்.

தவறு நடந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென முதல்வர் விஜய் அறிவுறுத்தியுள்ளார். அதன்பேரில் தற்போது காவல் மரணம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்யப் பட்டு, சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காவல் மரணங்களில் தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். யாரையும் காப்பாற்றும் எண்ணம் அரசுக்கு இல்லை. பாதிக்கப்பட்டவர்களுடன் துணை நிற்போம். புழல் சிறையில் ஒரு மரணம் சமீபத்தில் நடந்தது. அதுபற்றி விசாரணை நடைபெறுகிறது.

பட்ஜெட்டில் என்ன மாதிரியான முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்பதை அடிப்படையாக கொண்டு அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

திமுகஅதிமுகபாஜக திட்டம்

திமுக, அதிமுக, பாஜக ஆகிய கட்சிகள் சேர்ந்து ஆட்சி அமைக்க முயற்சி செய்கிறார்கள். திமுகவும், அதிமுகவும் தங்கள் கட்சியை நடத்த முடியாமல் அடுத்த ஓராண்டில் பாஜகவிடம் இணைத்துவிடு வார்கள். அதிமுகவை பழனிசாமி மொத்தமாக அடமானம் வைத்துவிட்டார்.

ஸ்டாலின் திமுகவை என்ன செய்வது என தெரியாமல் நிற்கிறார். எங்கள் எம்எல்ஏ.க்களுக்கு ரூ.50 கோடி வரை விலை பேசினர். இந்த அரசை கவிழ்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். கடந்த 5 ஆண்டுகளில் இரவு 9 மணி வரை பத்திரப்பதிவு நடைபெற்றுள்ளது.

பதிவாளர்கள் பலரும் ஓய்வு பெற முடியாத நிலையில்தான் உள்ளனர். லஞ்சம் புரையோடிப் போய் இருந்த துறை பதிவுத்துறைதான். கடந்த ஆட்சியில் அமைச்சராக இருந்த மூர்த்தி, ஒவ்வொரு பதிவு அலுவலகத்துக்கும் ஒருவரை நியமித்து 'அமைச்சர்கட்டிங்' வாங்கி கொண்டிருந் தார்.

இவ்வளவு மோசமான துறையை இந்த புதிய அரசு சீரமைத்துள்ளது. கடந்த 5 ஆண்டுகள் பத்திரப் பதிவுத்துறையில் மோசடி நடைபெற்றுள்ளது.

பழநி பத்திரப் பதிவு விவகாரத்தில் எவ்விதத்திலும் அரசின் மையத்துக்கு தொடர்பு இல்லை.

நேர்மையான முறையில் விசாரணை நடத்தப்பட்டு, சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். திமுகவினரும், திமுகவைச் சேர்ந்தவர்களும் போலி பத்திரங்களை தமிழகம் முழுவதும் போட்டுள்ளனர். மேகேதாட்டு அணை விவகாரத்தில் அரசு சட்டரீதியாக அணுகி வருகிறது. மேகேதாட்டுவில் அணை கட்ட அனுமதிக்கப் போவதில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## சோனம் வாங்சுக் போராட்டத்துக்கு த.வா.க., முழு ஆதரவு

சென்னை, ஜூலை.18-

சமூக ஆர்வலர் சோனம் வாங்சுக் மேற்கொண்டுள்ள உண்ணாவிரத போராட்டத்திற்கும், தமிழக வாழ்வுரிமைக் கட்சி தனது முழு ஆதரவையும் தெரிவித்துக் கொள்கிறது என்று கூறியுள்ளார் தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன்.

மேலும், மத்திய அரசு நீட்டை முழுமையாக ரத்து செய்து, மாநிலங்களின் கல்வி உரிமையை மதிக்கும் வகையில் மாணவர் சேர்க்கை முறையை உறுதி செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் என்றும், நீட் உள்ளிட்ட தேசிய நுழைவுத் தேர்வு முறையில் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தி டெல்லியில் நடைபெற்று வரும் போராட்டத்திற்கும், அதற்கு ஆதரவாக சமூக ஆர்வலர் சோனம் வாங்சுக் மேற்கொண்டுள்ள உண்ணாவிரத போராட்டத்திற்கும், தமிழக வாழ்வுரிமைக் கட்சி தனது முழு ஆதரவையும் தெரிவித்துக் கொள்கிறது.

நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்பது தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தொடக்க காலம் முதலான உறுதியான கொள்கையாகும். நீட் என்பது சமூக நீதிக்கு எதிரானதும், ஏழை, எளிய, கிராமப் புற மற்றும் அரசுப் பள்ளி மாணவர்களின் மருத்துவ கனவை பறிக்கும் அநீதியான தேர்வு முறையுமாகும்.

தேர்வு முறைகேடுகளும், வினாத்தாள் கசிவுகளும் நீட் தேர்வின் நம்பகத் தன்மையையே கேள்விக்குறியாக்கியுள்ள நிலையில், மத்திய அரசு நீட்டை முழுமையாக ரத்து செய்து, மாநிலங்களின் கல்வி உரிமையை மதிக்கும் வகையில் மாணவர் சேர்க்கை முறையை உறுதி செய்ய வேண்டும்" என்று வேல்முருகன் வலியுறுத்தியுள்ளார்.

## பட்ஜெட்டில் மருத்துவத்துறைக்கு பல புதிய அறிவிப்புகள்; அமைச்சர் அருண்ராஜ் தகவல்

சென்னை, ஜூலை.18-

தமிழக பட்ஜெட்டில் மருத்துவத்துறைக்கு பல புதிய அறிவிப்புகள் காத்திருப்பதாக சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அருண்ராஜ் தெரிவித்தார்.



இந்தியர்களின் ஆயுட்காலம் நீட்டிப்பு குறித்து டாக்டர் நவீன் ஞானசேகரன் எழுதிய 'தி 100 இயர் ப்ளூ பிரின்ட்' (The 100 year Blue Print) எனும் புத்தகத்தை அமைச்சர் அருண்ராஜ் வெளியிட்டார்.

நிகழ்ச்சியில் அவர் பேசுகையில், "நமது முன்னோர்கள் உடலை எந்த அளவுக்கு பாதுகாத்தார்களோ, அந்த அளவுக்கு நாம் இப்போது பின்னோக்கி சென்று கொண்டிருக்கிறோம்.

'உணவே மருந்து' என்ற வாழ்க்கை முறையே சிறந்தது. எனவே, சத்தான உணவுகளையும், புரதச்சத்து மிக்க உணவுகளையும் நாம் அதிகம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மேலை நாடுகளில் எந்த நேரத்தில் வேலையை முடித்து வந்தாலும் அவர்கள் உடற்பயிற்சியில் கவனம் செலுத்துகின்றனர். ஆனால், நம்முடைய நாட்டில் அவ்வாறு இல்லை. உடற்பயிற்சிதான் நோயற்ற வாழ்க்கையை கொடுக்கும் என்ற உண்மையை நாம் உணர வேண்டும்.

எது சிறந்த உணவு என்பது கூட தெரியாத அளவுக்கு நம்முடைய வாழ்வியல் மாறி இருக்கிறது. குறிப்பாக, பிளாஸ்டிக் கவரில் சூடாக டீ வாங்கி வருகிறார்கள். இதனால் பிளாஸ்டிக்கில் உள்ள மோசமான ரசாயனங்கள் நம் உடலில் கலக்கின்றன. அது புற்றுநோயை கூட ஏற்படுத்தும் தன்மை கொண்டது.

இது போன்ற விஷயங்கள் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும். முன்பெல்லாம் அறிவார்ந்த சமூகமாக நாம் இருந்தோம். தற்போது, படித்திருந்தும் முட்டாள்களாக இருக்கிறோம்.

வீடுகளுக்கு வருபவர்கள் பழங்களை தவிர்த்து, சர்க்கரையை அதிகம் கொட்டி தயாரிக்கப்படும் ஸ்வீட்களை வாங்கி வருகிறார்கள். இதுபோன்ற விஷயங்களை நாம் தவிர்க்க வேண்டும்" என அமைச்சர் அருண்ராஜ் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, செய்தியாளர்களிடம் பேசிய அவர், "இம்மாத இறுதியில் தமிழக பட்ஜெட் சட்டசபையில் தாக்கல் செய்யப் படவுள்ளது. இந்த பட்ஜெட்டில், ஆரோக்கியத்தை வளர்க்கக்கூடிய திட்டங்கள் இடம்பெறவுள்ளன.

மருத்துவத்துறைக்கு பல புதிய அறிவிப்புகள் காத்திருக்கின்றன. ஓமந்தூரார் மருத்துவமனையில் முழு உடல் பரிசோதனை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அதனை பல்வேறு மாவட்டங்களில் செயல்படுத்து வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

கடந்த ஆட்சியில் கொண்டு வந்த திட்டங்களை அரசியல் காரணத்திற்காக நிறுத்த மாட்டோம். அதனை எவ்வாறு மேம்படுத்தி செயல்படுத்துவது என்பதில்தான் அரசு கவனம் செலுத்துகிறது.

செயற்கையான முறையில் செறிவூட்டப்பட்ட வண்ண அப்பளங்கள் உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கிறது. அதனால் அதனை தடை செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாராசிட்டமால் மருந்தில் மிகக்குறைந்த அளவே ஆல்கஹால் பயன்படுத்தப்படுகிறது. இது தொடர்பான விளக்கத்தையும் சுகாதாரத்துறை அளித்துள்ளது.

மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில், மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும்" என அமைச்சர் அருண்ராஜ் கூறினார்.

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**



## பம்மதுகுளம் ஊராட்சி கோணிமேடு ரவுண்டானாவில் பாமகவன்னியர் சங்க கொடிகள் ஏற்றுதல் நிகழ்ச்சி

மாதவரம், ஜூலை.18-

மாதவரம் தொகுதி திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் வில்லிவாக்கம் ஒன்றியம் பம்மதுகுளம் ஊராட்சி கோணிமேடு டவுண்டானாவில் பாட்டாளி மக்கள் கட்சியின் 38ம் ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு கொடி ஏற்றுதல் நிகழ்ச்சி மாவட்ட துணை செயலாளர் முனுசாமி ஏற்பாட்டில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் சிவபிரகாசம் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட தலைவர் சபாபதி, முன்னாள் மாவட்ட செயலாளர் ஞானபிரகாசம் ஆகியோர் முன்னிலை வகித்தார். முன்னதாக வில்லிவாக்கம் ஒன்றிய செயலாளர் சகாதேவன் அனைவரையும் வரவே ற்றார். நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக முன்னாள் அம்பத்தூர் நகரமன்ற தலைவர் கே.என் .சேகர் கலந்துகொண்டு பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் வன்னியர் சங்க கொடியினை ஏற்றிவைத்து பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார். இதில் மத்திய மாவட்ட செயலாளர் ஆனந்தகிருஷ்ணன், மத்திய மாவட்ட தலைவர் பாண்டுரங்கன், மாவட்ட இளைஞரணி தலைவர் ராஜேஷ், மாவட்ட செயற்குழு உறுப்பினர் லட்சுமிபதி, ஒன்றிய இளைஞரணி செயலாளர் சக்திவேல், வன்னியர் சங்க ஒன்றிய தலைவர் வெல்டிங் குமார், அப்புகவுண்டர் மற்றும் ஆறுமுகம், ஜம்பு, பன்னீர்செல்வம் உள்ளிட்ட பாமக நிர்வாகிகள், வன்னியர் சங்க பொறுப்ப ாளர்கள் திரளாக கலந்துகொண்டனர்.

## கன்னியாகுமரி மாவட்டம் சிறையில் மரணமடைந்த சபரி வர்மன் மனைவிக்கு ரூ. 1 லட்சம் உதவிபி.டி.செல்வகுமார் வழங்கினார் முதல்வர் நிவாரணம் வழங்க வேண்டுகோள்



கன்னியாகுமரி, ஜூலை.18-

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் சிறையில் மாற்றுத் திறனாளி சபரி வர்மன் உயிரிழந்த சம்பவம் தமிழகம் முழுவதும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், அவரது மனைவிக்கு ரூ. 1 லட்சம் நிதியுதவியை கலப்பை மக்கள் இயக்க தலைவர் பி.டி.செல்வகுமார் வழங்கினார்.இதையடுத்து, அங்கு செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: தமிழக முதல்வர் விஜய் அவர்கள் மக்கள் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து அதிரடியாக செயல்படுத்தி வருகிறார். இந்நிலையில், கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் சிறையில் மாற்றுத் திறனாளி இளைஞர் உயிரிழந்த சம்பவம் மக்களிடையே அச்சமான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது. தமிழகத்தில் குட்கா மற்றும் போதைப் பொருட்கள் உற்பத்தியாளர்கள் மற்றும் கடைகளுக்கு விநியோகம் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். உயிரிழந்த அவரின் மனைவி, தந்தை, குழந்தை, சகோதரி ஆகியோர் வாடகை வீட்டில் வசித்து வருவதுடன் கஷ்டமான சூழ்நிலையில் உள்ளனர். தற்போது, பெண்கள் பிரச்சினையில் அதிரடியாக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வரும் தமிழக முதல்வர் விஜய் அவர்கள், ஏழை மக்களின் வாழ்க்கையை நன்கு அறிந்தவர். எனவே, உயிரிழந்த சபரி வர்மன் மனைவிக்கு ரூ. 50 லட்சம் நிதியுதவி வழங்குவதுடன், அப்பெண்ணின் வாழ்வாதாரம் கருதி அரசு வேலை வழங்க வேண்டும். கண்டிப்பாக இதில் முதல்வர் நடவடிக்கை எடுப்பார் என்ற நம்பிக்கை உள்ளது என பி.டி.செல்வகுமார் தெரிவித்தார்.

இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டவரின் மனைவிக்கு பி.டி.செல்வகுமார் ரூ. 1 லட்சம் வழங்கிய மனிதநேயத்தை பொதுமக்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் பெரிதும் பாராட்டினர்.





## பாடியநல்லூர் ஊராட்சி பெரியார் நகரில் உள்ள ஸ்ரீ சந்தன முத்துமாரியம்மன் ஆலயத்தில் ஆடித்திருவிழாவை முன்னிட்டு பால்குடம் எடுத்தல் நிகழ்ச்சி

மாதவரம், ஜீலை.18-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி பெரியார் நகரில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ சந்தன முத்துமாரியம்மன் ஆலயத்தில் 45ம் ஆண்டு ஆடித்திருவிழாவை முன்னிட்டு ஆலய நிர்வாகிகள் தலைவர் பாலசந்தர், செயலாளர் அருள், பொருலாளர் சுரேஷ், துணைத்தலைவர்கள் பால்ராஜ், பிஸ்மில்லா, துணை செயலாளர்கள் செந்தில், பரந்தாமன், துணை பொருலாளர் குணசேகரன், கௌரவ ஆலோசகர்கள் ஜெயச் சந்திரன், மணிமாறன், முனியசாமி, செயற்குழு உறுப்பினர்கள் ராஜா, நந்தன், ராஜா, தங்கசெல்வம், ராஜி, பாலகிருஷ்ணன், சிவக்குமார், சங்கர், சிவக்குமார், பொதுகுழு உறுப்பினர்கள் சந்திரசேகர், ஸ்டாலின், ராஜா, பழனி, அசோக், ஹரிகிருஷ்ணன், டில்லி, ரமேஷ், பாவேந்தன், பிரபு, வசந்த், உதயகுமார், சோலைபாண்டியன், கலாநிதி, ஜெய்குமார், லட்சுமிபதி உள்ளிட்ட மகளிர் குழுவினர்கள், பெரியார்நகர் இளைஞரணி, இளையநிலா நற்பணி மன்றத்தினர்கள், பெரியார்நகர் நற்பணி மன்றத்தினர்கள் உட்பட கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் அருள்மிகு ஸ்ரீ பவானி அம்மன் ஆலயத்திலிருந்து மேளதாளத்துடன் பக்தர்கள் தங்களது சிறசியில் பால்குடம் எடுத்துவந்து ஸ்ரீ சந்தன முத்துமாரியம்மன் ஆலய மாடவீதி உலாவந்து அம்மனுக்கு பால் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர்.

## நீலகிரி மாவட்டம் உதகை ஊராட்சி ஒன்றியம், கடநாடு ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு ஆய்வு





நீலகிரி, ஜூலை.18-

நீலகிரி மாவட்டம் உதகை ஊராட்சி ஒன்றியம், கடநாடு ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர்லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.நீலகிரி மாவட்டம் உதகை ஊராட்சி ஒன்றியம், கடநாடு ஊராட்சிக்குட்பட்ட தாவணெ பகுதியில் பிரதம மந்திரி ஜென்மன் திட்டத்தின் கீழ் ரூ.5.73 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் தொகுப்பு வீட்டினையும், மாநில நிதிக்குழு திட்டத்தின் கீழ் ரூ.3.07 கோடி மதிப்பில் தாவணெ மல்லிக்கொரை சாலை இணைக்கும் வழியில் தரைப்பாலம் கட்டும் பணியினையும், ஆலட்டி பகுதியில் ரூ.34.55 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் பல்நோக்கு கட்டட பணியினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்.மேலும், கடநாடு ஊராட்சிக்குட்பட்ட ஆலட்டி மந்தலட்டி பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஆர். இளங்கோ அவர்களின் உள்ளூர் பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.21.52 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள தரைமட்ட நீர் தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் குழாய் பணியினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.அதனை தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கடநாடு ஊராட்சிக்குட்பட்ட சின்னக்குன்னூர் பகுதி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு மதிய உணவினை வழங்கி மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடி, சமையற் கூடம், உணவு பொருட்களின்இருப்பு மற்றும் உணவின் தரம் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர், சின்னக்குன்னூர் பகுதியில் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள நாற்றங்கால் பண்ணையினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு அங்கு பராமரிக்கப்படும் செடிகளின் விவரம் குறித்தும் மற்றும் கடநாடு ஊராட்சி மன்ற அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகள் குறித்தும், அதனை தொடர்ந்து கடநாடு நியாயவிலைக்கடையில் பொருட்களின் இருப்பு மற்றும் தரம் குறித்தும், கடநாடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகள் மற்றும் வழங்கப்படும் கடனுதவிகள் குறித்தும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.இவ் ஆய்வின் போது, உதகை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சந்திரசேகர், ஸ்ரீதரன், உதவி செயற்பொறியாளர் ஆறுச்சாமி, உதவி செல்லதுரை, சந்திரசேகரன் உட்பட பலர் உடனிருந்தனர்.



## ராணிப்பேட்டையில் தோட்டக்கலை சார்பில் 2.0 திட்டத்தை ரத்து செய்யக்கோரி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

ராணிப்பேட்டை, ஜூலை.18-

ராணிப்பேட்டை மாவட்டம் முத்துகடை பேருந்து நிலையத்தில்வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை வெளியிட்டுள்ள அரசாணை எண் 230, 252 மற்றும் 288ன் அடிப்படையில் செயல்படுத்தப்பட்டுள்ள "உழவர் அலுவலர் தொடர்புத் திட்டம் (UATT 2.0)"ஐ ரத்து செய்ய வலியுறுத்தி, தமிழ்நாடு தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில், இன்று மாவட்டத் தலைநகரங்களில் ஒருங்கிணைந்த கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அலுவலர்கள், UATT 2.0 திட்டம் தோட்டக்கலைத் துறையின் தனித்துவத்தையும், தொழில்நுட்ப அடையாளத்தையும் பாதிப்பதாக குற்றம்சாட்டினர்.

தோட்டக்கலைத் துறை என்பது காய்கறிகள், பழங்கள், மலர்கள், நறுமணப் பயிர்கள், அலங்காரத் தாவரங்கள் மற்றும் மூலிகைப் பயிர்கள் உள்ளிட்ட உயர் தொழில்நுட்பம் சார்ந்த துறையாகும். மாநிலத்தின் உணவுப் பாதுகாப்பு, ஊட்டச்சத்து பாதுகாப்பு, விவசாயிகளின் வருமான உயர்வு மற்றும் வேளாண் ஏற்றுமதியில் இத்துறை முக்கிய பங்கு வகிப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.1979ஆம் ஆண்டு புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி. ராமச்சந்திரன் தலைமையில் தோட்ட க்கலைத் துறை தனித்துறையாக உருவாக்கப்பட்டதாகவும், பின்னர் 2007ஆம் ஆண்டு மறுசீரமைக்கப்பட்டதன் மூலம் தமிழ்நாடு நாட்டின் முன்னணி தோட்டக்கலை மாநிலமாக வளர்ச்சி பெற்றதாகவும் கூறினர். தற்போது நடைமுறைக்கு வந்துள்ள UATT 2.0 திட்டத்தின் கீழ், ஒரு கள அலுவலருக்கு அதிகப்படியான கிராமங்கள் மற்றும் ஆயிரக் கணக்கான ஹெக்டேர் சாகுபடி பரப்புகள் ஒதுக்கப்பட்டுள்ளதால், விவசாயிகளுக்கு தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை உரிய நேரத்தில் வழங்க முடியாத சூழல் உருவாகியுள்ளதாக அலுவலர்கள் தெரிவித்தனர்.மேலும், எந்தவொரு வல்லுநர் குழுவின் பரிந்துரையோ, அறிவியல் ஆய்வு அறிக்கையோ இன்றி இத்திட்டம் அவசரமாக நடைமுறைப்படுத்த ப்பட்டுள்ளதாகவும், இதனால் களப்பணியாளர்களும் விவசாயிகளும் பல்வேறு நிர்வாக மற்றும் தொழில்நுட்ப சிக்கல்களை எதிர்கொள்வதாகவும் அவர்கள் குற்றம் சாட்டினர்.இதனால், UATT 2.0 தொடர்பாகவெளியிடப்பட்ட அனைத்து அரசாணைகளையும் தமிழக அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்றும், இதற்கு முன்பு நடைமுறையில் இருந்த பழைய உழவர் அலுவலர் தொடர்புத் திட்டத்தை மீண்டும் அமல்படுத்த வேண்டும் என்றும் தமிழ்நாடு தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு தமிழக அரசை வலியுறுத்தியுள்ளது.






■ நீலகிரி மாவட்டத்தில் யுவ ஆப்த மித்ரா திட்டத்தின் கீழ் NCC/NSS/MYB பதிவு பெற்ற தன்னார்வலர்களுக்கு பேரிடர் தொடர்பான உண்டு,உறைவிட பயிற்சியானதுகடந்த 13.07.2026 முதல் 19.072026 வரை சுமார் 200 தன்னார்வலர்களுக்கு முதல் கட்ட பயிற்சியாது கேத்தி CSI பொறியியல் கல்லூரியில்நடைபெற்று வருகிறது.மேலும்,இரண்டாம் கட்ட பயிற்சியானது வருகின்ற 20.07.2026 முதல் 26.07.2026 வரை சுமார் 200 தன்னார்வலர்களுக்கு வழங்கப்பட உள்ளது..இப்பயிற்சியில், இயற்கை பேரிடர் தொடர்பாக வல்லுநர்கள் மூலமாக உரிய பயிற்சி வழங்கப்பட்டது



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், இந்தியாவின் 16 வது மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி நடைபெறவுள்ளதையடுத்து, பொதுமக்கள் தங்களது குடும்ப விவரங்களை தாங்களே இணையதளம் மூலம் பதிவு செய்யும் சுயக் கணக்கெடுப்பு வசதியை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் நேற்று (17.07.2026) துவக்கி வைத்து, தனது வீட்டுப் பட்டியல் மற்றும் வீடுகளின் கணக்கெடுப்பை இணையதளத்தில் பதிவு செய்தார். உடன், மாவட்ட புள்ளிஇயல் துணை இயக்குநர் குப்புசாமி, தனி வட்டாட்சியர் (பேரிடர் மேலாண்மை) வெங்கடேசன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## சிறையில் உயிரிழந்தசபரிவர்மனின் குடும்பத்தினருக்கு அமைச்சர்கள் ஆறுதல்உடலை வாங்க மறுத்ததால் நிவாரண உதவி வழங்காமல் திரும்பி சென்றனர்சபரிவர்மன் குடும்பத்தினரை அமைச்சர்கள் ராஜேஷ்குமார், ஸ்ரீநாத் ஆகியோர் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினர்



நாகர்கோவில், ஜூலை.18-


நாகர்கோவில் சிறையில் உயிரிழந்த விசாரணை ண கைதி சபரிவர்மன் குடும்பத்தினரை அமைச்சர்கள் ராஜேஷ்குமார் மற்றும் ஸ்ரீநாத் ஆகியோர் சந்தித்து ஆறுதல் கூறினர். அப்போது அவர்கள் உடலை வாங்க மறுத்ததால் நிவாரண உதவி வழங்காமல் திரும்பி சென்றனர்.

வடக்கு தாமரை குளத்தை அடுத்த ஈத்தங்காடு நாராயணன்புதூரில் பாதிக்கப்பட்ட சபரிவர்மன் குடும்பத்தினருக்கு அரசு தரப்பில் நிவாரணம் வழங்கி ஆறு தல் கூறுவதற்காக தமிழக சுற்றுலா துறை அமைச்சர் ராஜேஷ்குமார் மற்றும்மீன்வளத்துறை அமைச்சர் ஸ்ரீநாத் ஆகியோர் நேற்று சென்னையில் இருந்து விமா னம் மூலம் தூத்துக்குடி வந்தனர். அங்கிருந்து கார் மூலம் இரவு 9.40 மணி அளவில் சபரிவர்மன் வீட்டிற்கு வந்தனர். அமைச்சர்களுடன் மாவட்ட கலெக்டர் பிரதாப், எஸ்பி ஸ்டாலின் ஆகியோர் வந்தனர்.பின்னர் சபரிவர்மன் வீட்டிற்கு சென்று மனைவி ஆனந்தவல்லி, அவரது சகோதரி கிருஷ்ன கவுதமி மற்றும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி, அரசு சார்பில் வழங்கப்பட்ட ரூ.10 லட்சம் செக் மற்றும் ஊரக வளர்ச்சி துறையில் தற்காலிக பணிக்கான ஆணை,

நெடுஞ்சாலை ஓரம் 2 சென்ட் வீட்டு மனை உள் ளிட்டவற்றை வழங்க தயா ரானார்கள்.அப்போது உடலை வாங்க மனைவி மற்றும் உற வினர்களிடம் அமைச்சர் கள் வலியுறுத்தினர். அதற்கு உறவினர்கள், பிரேத பரிசோதனை செய்த சிடியை மதுரையில் உள்ள மக்கள் அதிகாரம் அமைப்பின் மருத்துவருக்கு அனுப்ப வேண்டும். அதனை அவர் ஆய்வு செய்து, அறிக்கை சரிதான் என கூறினால் உடலை வாங்குவோம் என கூறினர். இதனை அடுத்து நிவாரண உதவி வழங்காமல் அமைச்சர்கள் திரும்பி சென்றனர்

# குச்சனூர் சனீஸ்வர பகவான் ஆடி திருவிழா நடைபெறவுள்ளதையொட்டி முன்னேற்பாடுப் பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம்





தேனி, ஜூலை.18-

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஆலுவலகத்தில் 15.07.2026 அன்று குச்சனூார் அருள்மிகு சுயம்பு சனீஸ்வர பகவான் திருக்கோயிலில் ஆடி திருவிழா நடைபெறவு ள்ளதையொட்டி மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடுப் பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் வருவாய் கோட்டாட்சியர்.சையது முகைதீன் இப்ராஹிம் தலைமையில் நடைபெற்றது. உத்தமபாளையம் வட்டம், குச்சனூார் அருள்மிகு சுயம்பு சனீஸ்வர பகவான் திருக்கோயிலில் ஆடி திருவிழா வருகின்ற 18.07.2026 முதல் 15.08.2026 நடைபெற வுள்ளதையொட்டி வருவாய்துறை, காவல்துறை இந்துசமய அறநிலைய துறை, பேரூராட்சி நிர்வாகம், சுகாதாரத்துறை, தீயணைப்புத்துறை உள்ளிட்ட துறை அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த ஆலோசனைக்கூட்டத்தில், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு பிரச்சனைகளை சமாளிக்க தேவையான அளவில் காவலர்களை நிமித்திடுமாறும், பொதுமக்கள் மற்றும் பக்தர்களுக்கு தேவையான குடிநீர், சுகாதாரம் உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்தி கொடுத்திட இந்து சமய அறநிலையத்துறையினருக்கும், கோவில் உள்ளே மற்றும் சுற்றுப்புறங்களில் உண்டாகும் கழிவுகளை அவ்வப்போது அகற்றிடுமாறு குச்சனூார் பேரூராட்சி நிர்வாகத்திற்கும் அறிவுறுத்தப்பட்டது மேலும், சுகாதாரத்துறை சார்பில் ஆம்புலன்ஸ் மற்றும் மருத்துவ வசதிகளை செய்து கொடுத்திடுமாறும், பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் கோவிலுக்கு சிரமமின்றி வந்து செல்ல ஏதுவாக போதிய சிறப்பு பேருந்துகளை இயக்கிடுமாறு தழிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு தெரிவிக்கப்பட்டது. திருவிழா நாட்களில் கோவில் வளாகம் மற்றும் வெளியே தலா ஒரு தீயணைப்பு வாகனங்களை நிறுத்திடுமாறு தீயணைப்புத்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. கோவில் நிர்வாகம் மூலம் வழங்கப்படும் அன்னதானம் மற்றும் தனியார் ஹோட்டல்களில் விற்பனை செய்யப்படும் உணவுப் பொருட்களில் தரத்தினை அவ்வப்போது ஆய்வு செய்திடுமாறு உணவு பாதுகாப்பு துறையினருக்கும், தமிழ்நாடு மின்சாரத்துறை அலுவலர்கள் தேவையான பணி அலுவலர்களை நியமித்து திருவிழா நாட்களில் விபத்து ஏதும் எற்படாவண்ணம் பணிபுரிந்திடுமாறும் அறிவுறுத்தப் பட்டது இக்கூட்டத்தில் வட்டாட்சியர் (உத்தமபாளையம்) பாலசண்முகம் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# தேனி வட்டத்தில் வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா .வைத்திநாதன், நேரில் பார்வையிட்டு ஆய்வு



தேனி, ஜூலை.18-

தேனி வட்டத்தில் வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா .வைத்திநாதன்,நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் தேனி வட்டம் வீரபாண்டி மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பேரூராட்சித் துறையின் மூலம் ரூ.65 இலட்சம் மதிப்பீட்டில் ஆய்வக்கூடத்துடன் கூடிய கூடுதல் மருத்துவக் கட்டிடம் கட்டுமானப் பணி நடைபெற்று வருவதை பார்வையிட்டு, அதன் பணிகள் குறித்த விவரங்களை கேட்டறிந்ததுடன், உரிய காலத்திற்குள் பணிகளை முடித்திட சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். அதனைத்தொடர்ந்து, அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள சித்த மருத்துவப் பிரிவினை பார்வையிட்டு, மருத்துவச் சிகிச்சை குறித்த விவரங்களை கேட்டறிந்ததுடன், பொதுமக்களுக்கு போதிய அளவு மருந்துகள் இருப்பு வைத்து வழங்கிட வேண்டும் என மருத்துவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார், தொடர்ந்து,தேனி ஊராட்சி ஒன்றியம், கோட்டூர் ஊராட்சியில் உள்ள கால்நடை மருந்தகத்திற்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டதுடன், மருத்துவமனை வளாகத்தில் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் தரைத்தளத்தை சீரமைக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்,

பின்னர், கோட்டூரில் உள்ள தேனி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையத்தை பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன், அதன் செயல்பாடுகள் குறித்த விவரங்களைக் கேட்டறிந்து சிறப்பாக செயல்படுத்திட வேண்டும் என பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுரை வழங்கினார். மேலும், கோட்டூர் ஊராட்சியில், தேனிகுமுளி பிரதான சாலையிலுள்ள சமுதாயக்கூடத்தில் ஊராட்சி நிதியின் கீழ் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் கோட்ட அளவிலான ஓரிட சேவை மையம் அமைத்திடும் வகையில் நடைபெற்று வரும் சீரமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு பணிகளை பார்வையிட்டு உரிய முறையில் பராமரித்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இந்த ஆய்வில், வீரபாண்டி ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் மரு. கலைச்செல்வி, வீரபாண்டி செயல் அலுவலர் இளங்கோவன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# பம்மல் வழக்கறிஞர் இரா.லோகநாதன் ஏற்பாட்டில் அம்மனுக்கு தங்க முலாம் கவசம்

பம்மல், ஜூலை.18-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த பம்மல் இலட்சுமி நாராயண நகர் பகுதியில் அமைந்துள்ள ஓம் சக்தி மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் 27ஆம் ஆண்டு ஆண்டு ஆடி மாத திருவிழாவை முன்னிட்டு பம்மல் வழக்கறிஞர் இரா.லோகநாதன் ஏற்பாட்டில் அம்மனுக்கு தங்க முலாம் பூசப்பட்ட கவசத்தை வெ.க. மாவட்ட செயலாளர் மின்னல் வி.குமார் முன்னிலையில், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.காமாட்சி ஜெயகிருஷ்ணன் ஆலய நிர்வாகிகளிடம் வழங்கினார் அப்போது எஸ்.சரவணராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.



# நடை ரோந்து (Foot Patrolling) மூலம் குற்றங்கள் நடைபெறா வண்ணம் கண்காணிக்கும்

தேனி, ஜூலை.18-

தேனி மாவட்ட காவல்துறையினர்.பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கிலும், தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரி.ஷி.பிரவீன் கௌதம், உத்தரவின் பேரில், தேனி மாவட்ட காவல்துறையினர் இரவு நேரங்களில் தீவிர நடை ரோந்து (Foot Patrolling) பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.மக்கள் அதிகம் கூடும் இடங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் முக்கிய சாலைகளில் காவல்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், முன்னாள் படைவீரர் நலத்துறையின் சார்பில், படைவீரர்கள், முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களை சார்ந்தோர்களுக்கான நடைபெற்ற சிறப்பு குறைத் தீர்க்கும் நாள் கூட்டம் மற்றும் சுயதொழில் வேலைவாய்ப்பு கருத்தரங்கத்தில், முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களை சார்ந்த கல்லூரி பயிலும் 4 பிள்ளைகளுக்கு கல்வி உதவித்தொகையாக தலா ரூ.25,000/வழங்குவதற்கான பரிந்துரை கடிதத்தை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., (16.07.2026) அன்று வழங்கினர். உடன் முன்னாள் படைவீரர் நல துணை இயக்குநர், லெப்.கர்னல்.ஆர்.பழனிவேலு, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் விஜயகுமார், மாவட்ட தொழில் மையம் பொது மேலாளர் ராமமூர்த்தி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் கஸ்தூரி, தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் அலுவலர் இசக்கிராஜன், முன்னாள் படைவீரர் நல அமைப்பாளர் ஜெகநாதன் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.



■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 முன்னிட்டு, முதல் கட்டமான வீடுகள் கணக்கெடுப்பு சுய கணக்கெடுப்பில் மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., (17.07.2026) அன்று தமது வீட்டு விவரங்களை பதிவு செய்து பொதுமக்களிடையே சுய கணக்கெடுப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார். உடன் தேர்தல் வட்டாட்சியர் திருமலை மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.



# பம்மதுகுளம் ஊராட்சி லட்சுமிபுரம் கிராமத்தில் பாமக கொடிஏற்றுதல் நிகழ்ச்சி

மாதவரம், ஜூலை.18-

மாதவரம் தொகுதி திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் வில்லிவாக்கம் ஒன்றியம் பம்மதுகுளம் ஊராட்சி லட்சுமிபுரம் கிராமத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் 38ம் ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு கொடி ஏற்றுதல் நிகழ்ச்சி மாநில பொதுகுழு உறுப்பினர் தமிழ்உமாபதி ஏற்பாட்டில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் சிவபிரகாசம் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட தலைவர் சபாபதி, முன்னாள் மாவட்ட செயலாளர் ஞானபிரகாசம் ஆகியோர் முன்னிலை வகித்தார். முன்னதாக வில்லிவாக்கம் ஒன்றிய செயலாளர் சகாதேவன் அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக முன்னாள் அம்பத்தூர் நகரமன்ற தலைவர் கே.என்.சேகர் கலந்துகொண்டு பாட்டாளி மக்கள் கட்சி கொடியினை ஏற்றிவைத்து பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார். இதில் முன்னாள் கவுன்சிலர் ராஜேஷ்வ Kமுனுசாமி,ஆவடி ஆனந்தகிருஷ்ணன், மாவட்ட இளைஞரணி தலைவர் ராஜேஷ், மாவட்ட செயற்குழு உறுப்பினர் லட்சுமிபதி, ஒன்றிய இளைஞரணி செயலாளர் சக்திவேல், வன்னியர் சங்க ஒன்றிய தலைவர் வெல்டிங் குமார், அப்புகவுண்டர் மற்றும் ஆறுமுகம், ஜம்பு, பன்னீர்செல்வம், சிவா, ரமேஷ், சுப்பிர மணி, துரை உள்ளிட்ட பாமக நிர்வாகிகள், வன்னியர் சங்க பொறுப் பாளர்கள் திரளாக கலந்துகொண்டனர்.

# அலமாதி ஊராட்சியில் தளபதி விஜய் பயிலகம் திறப்பு விழா



மாதவரம், ஜூலை.18-

மாதவரம் தொகுதி சோழவரம் தெற்கு ஒன்றியம் அலமாதி ஊராட்சியில் தமிழக வெற்றிக் கழகம் திருவள்ளூர் தென்மேற்கு மாவட்ட கழகம் சார்பில்மறைந்த முன்னாள் தமிழ்நாடு முதல்வர் பெருந்தலைவர் காமராஜரின் 124வது பிறந்த நாளை முன்னிட்டு தளபதிவிஜய் பயிலகம் திறப்பு விழா மாவட்ட கழக துணை செயலாளர் நிவேதா செல்வகுமார் ஏற்பாட்டில் நடைபெற்றது. சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் ஜெ.செல்வகுமார் அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சிக்கு சிறப்பு அழை ப்பாளராக திருவள்ளூர் தென்மேற்கு மாவட்ட கழகச் செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான எம்.எல். விஜய்பிரபு தலைமை தாங்கி கட்சி கொடியினை ஏற்றிவைத்து அனைவருக்கும் இனிப்பு வழங்கினார். பின்னர் பயிலகத்தை ரிப்பன்வெட்டி திறந்து வைத்து பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டுப் புத்தகம் பேனா பென்சில் உள்ளிட்ட கல்வி உபகரணங்களை வழங்கினார். இதில் ஒன்றிய கழக நிர்வாகிகள் சசிகுமார், நந்தகுமார், ரோஹித், மனோஜ், செந்தில், புஷ்பராஜ், அழகுசுந்தரம், சீனிவாசன், பரத், ஹரி, விக்கி, சதீஷ், கமல், கோபிநாத் மற்றும் மாவட்ட கழக பொருளாளர் மனோஜ் குமார், மகளிர் அணி செயலாளர் ஷாலினி, ஒன்றிய கழக செயலாளர்கள் மணிமாறன், லோகநாதன், முகிலன், மணிவேல் உட்பட தவெக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

# தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன் முக்கிய அறிவிப்பு




தேனி, ஜூலை.18-

தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது, இயற்கை சீற்றங்களால் ஏற்படும் பயிர் இழப்பிலிருந்து விவசாயிகளின் நலன் மற்றும் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின்படி 2026 2027ஆம் ஆண்டில் பிரதம மந்திரி பயிர்காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தற்போது நிலவும் எல்நினோ நிகழ்வின் தாக்கத்தால் தென்மேற்கு பருவமழை இயல்பைவிட குறைவாக இருக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால், குறுவை மற்றும் மானாவாரி பயிர்கள் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. இதனை கருத்தில் கொண்டு, விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில், 2026 குறுவை பருவத்தில் வாழை, மரவள்ளி, வெங்காயம், கத்தரி மற்றும் தக்காளி ஆகிய பயிர்களுக்கு பிரதம மந்திரி பயிர்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்களை விவசாயிகள் தேசிய பயிர்க்காப்பீட்டு இணையதளத்தில் காப்பீடு செய்து கொள்ளலாம். குறுவை வெங்காயம், கத்தரி, மற்றும் தக்காளி ஆகிய பயிர்களுக்கு காப்பீடு செய்வதற்கான கடைசிநாள் 31.08.2026 ஆகும். வாழை மற்றும் மரவள்ளி ஆகிய பயிர்களுக்கு 15.09.2026 வரை காப்பீடு செய்து கொள்ளலாம். அரசாணையின்படிதேனி மாவட்டத்தில் அறிவிக்கை செய்யப்பட்ட தொகுப்புகளில் விவசாயிகள்வாழைபயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.99,689.20 காப்பீட்டுத் தொகை பெற ரூ.4984.46 பிரிமியம் செலுத்திட வேண்டும். கத்தரி பயிருக்கு ஏக்கருக்கு ரூ.26,182 காப்பீட்டுத் தொகை பெற ரூ.1309.10 பிரிமியம் செலுத்த வேண்டும். வெங்காயம் பயிருக்கு ஏக்கருக்கு ரூ.45,250.40 காப்பீட்டுத் தொகை பெற ரூ.1828.12 பிரிமியம் செலுத்தவேண்டும். தக்காளி பயிருக்கு ஏக்கருக்கு ரூ.31,616 காப்பீட்டுத் தொகைபெற ரூ.1580.80 பிரிமியம் செலுத்திட வேண்டும். மரவள்ளி பயிருக்கு ஏக்கருக்கு ரூ.39,618.80 காப்பீடு தொகை பெற ரூ.1980.94 பிரிமியம் செலுத்திடவேண்டும். இத்திட்டத்தின்கீழ், மகசூல் இழப்பு, விதைப்பு / நடவு செய்ய இயலாத நிலை, விதைப்பு / நடவு பொய்த்தல், பகுதி சார்ந்த மற்றும் பயிர் வளர்ச்சி கால இடர்நிகழ்வுகளால் ஏற்படும் இழப்பு மற்றும் அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பு போன்ற இனங்கள் காப்பீடு செய்யப்படுகின்றன.

எனவே, கடன்பெறும் விவசாயிகள் அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்களை தொடக்க வேளாண்மை கடன் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் காப்பீடு செய்து கொள்ளலாம். கடன் பெறாத விவசாயிகள் பொது சேவை மையங்கள் (இசேவைமையங்கள்) அல்லது தேசிய பயிர்க்காப்பீட்டு இணைய தளத்தில் (https://pmfby.gov.in/) உள்ள "விவசாயிகள் கார்னர்" வாயிலாக நேரடியாகவும் பதிவு செய்து கொள்ளலாம். காப்பீடு செய்வதற்கான இறுதி தேதி எக்காரணத்திற்காகவும் நீட்டிக்கப்பட மாட்டாது. விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பதிவுசெய்யும்போது முன்மொழிவு விண்ணப்பத்துடன் பதிவுவிண்ணப்பம், கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் அடங்கல் / விதைப்பு அறிக்கை. கணக்கு புத்தகத்தின் (Bank pass book) முதல்பக்க நகல், ஆதார் அட்டை (And-haar Card) நகல் ஆகியவற்றை இணைத்து, கட்டணத் தொகையை செலுத்தியபின் அதற்கான இரசீதையும் பெற்றுக் கொண்டு. அதில் தாங்கள் காப்பீடு செய்த பயிர் மற்றும் அதற்கான கிராமம் / குறுவட்டம் உள்ளிட்ட விவரங்கள் சரியாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதிசெய்ய வேண்டும். மேலும் விபரங்களுக்கு வட்டார தோட்டக்கலை உதவி இயக்குர் அலுவல கங்களையோ அல்லது வங்கி கிளைகளையோ அணுகி தெரிந்துக்கொள்ளலாம்.

விவசாயிகளின் நலனுக்காக தமிழ்நாடு அரசு செயல்படுத்திவரும் இப்பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தில் விவசாயிகள் அறிவிக்கை செய்த பகுதிகளில், அறிவிக்கை செய்த பயிர்களைக் காப்பீடு செய்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தெரிவித்துள்ளார்.

# ஆடி முதல் வெள்ளி: காவேரிப்பட்டினம் அம்மன் கோயில்களில் சிறப்பு வழிபாடு, அன்னதானம்





கிருஷ்ணகிரி, ஜூலை.18-

ஆடி மாதத்தின் முதல் நாளான இன்று, முதல் வெள்ளிக் கிழமையை முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் சந்தைப்பேட்டை மாரியம்மன் கோயிலில் சிறப்பு அபிஷேகம், அலங்காரம் மற்றும் தீபா ராதனை நடைபெற்றது. கோயில் வளாகத்தில் அமைந்துள்ள தீர்த்தமாரி அம்மனுக்கும் சிறப்பு அபிஷேகம், அலங்காரம் செய்யப்பட்டு பக்தர்கள் தரிசனம் செய்தனர்.அதேபோல், காவேரிப்பட்டினம் பன்னீர்செல்வம் தெருவில் உள்ள ஸ்ரீ அங்காளம்மன் சுவாமி கோயிலிலும் சிறப்பு அபிஷேகம், அலங்காரம் மற்றும் பூஜைகள் நடைபெற்றன. இதையொட்டி, கோயில்களில் சிறப்பு அன்னதானம் வழங்கப்பட்டது.ஆடி முதல் வெள்ளியை முன்னிட்டு இன்று காலை முதலே ஏராளமான பக்தர்கள் அம்மன் கோயில்களுக்கு வருகை தந்து சிறப்பு தரிசனம் செய்து வழிபட்டனர். கோயில் வளாகங்களில் பக்தர்களின் திரளான வருகையால் பக்தி பரவசமான சூழல் நிலவியது.

# காமராஜர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு 700 மாணவ, மாணவிகளுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன





கிருஷ்ணகிரி, ஜூலை.18-

கல்வித்தந்தை பெருந்தலைவர் காமராஜரின் 123வது பிறந்தநாளை முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் ஒன்றியம் ஜெகதாப் கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.நிகழ்ச்சியில், காமராஜரின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. தொடர்ந்து, அவரது கல்விப் பணிகள் மற்றும் ஏழை எளிய மாணவர்களுக்காக அவர் ஆற்றிய அரும்பணிகள் குறித்து ஆசிரியர்கள் மாணவர்களிடம் எடுத்துரைத்தனர். இதனைத் தொடர்ந்து, அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பயிலும் 700க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன. மாணவர்கள் உற்சாகத்துடன் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் பள்ளித் தலைமையாசிரியர்கள் நந்தகுமார், ஜீவா, ஆசிரியர்கள், பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள் சென்னப்பன், சக்திவேல், அருண், மாது, கார்த்திக், ராம்மூர்த்தி, சின்னசாமி கவியரசு, ராமன், ரங்கன், குமார்,திருப்பதி ஆகியோர் கலந்து கொண்டனர்.



# பொத்தூர் கிராமத்தில் திருமலை திருப்பதி 10ம் ஆண்டு பாதயாத்திரை குழு சார்பில் பஜனைபந்தசேவை நிகழ்ச்சி

மாதவரம், ஜூலை.18-

மாதவரம் தொகுதி வில்லிவாக்கம் ஒன்றியம் பொத்தூர் ஊராட்சியில் பக்தர் களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் ஸ்ரீதேவி நீலாதேவி சமேத ஸ்ரீ வெங்கடாசலபதி ஆலயத்தில் திருமலை திருப்பதி 10ம் ஆண்டு பாதயாத்திரை குழு சார்பில் பஜனை மற்றும் பந்தசேவை நிகழ்ச்சி ஆலய நிர்வாகிகள் மற்றும் பாதயாத்திரை குழு பொறுப் பாளர்கள் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் மூலவருக்கு பால், தயிர், இளநீர், பன்னீர், சந்தனம்,மஞ்சள், குங்குமம், தேன், ஜவ்வாது உள்ளிட்ட பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் கீழ்குப்பம் ஸ்ரீராம ஆஞ்சநேய பக்த பஜனை சபாவின் பஜனை மற்றும் பந்தசேவை நிகழ்ச்சி வெகு விமர்சியாக நடைபெற்றது. இதனைத்தொடர்ந்து மூலவர் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு ஆலய அனைத்து நிலை நிர்வாகிகள், திருமலை திருப்பதி பாதயாத்திரை குழுவினர்கள் மற்றும் கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர்.

# உணவகத்துடன் குடிப்பகம் இணைந்த ரெஸ்டோ பார் திட்டம் தேவையில்லை: அன்புமணி!

சென்னை, ஜூலை.18-



அண்டை மாநிலங்களைப் போல, உணவகத்துடன் இணைந்து செயல்படும் 'ரெஸ்டோ பார்' தேவையில்லை என்றும், அந்த திட்டம் கைவிடாவிட்டால் பாமக போராட்டம் நடத்தும் என பாமக தலைவர் அன்புமணி தெரிவித்துள்ளார். ஆந்திரம், கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களில் நடைமுறையில் இருப்பதைப் போன்று தமிழ்நாட்டிலும் உணவங்களுடன் குடிப்பகங்களும் இணைக்கப்பட்ட 'ரெஸ்டோ பார்'களை அமைக்க உரிமம் வழங்குவது குறித்து தமிழக அரசு பரிசீலித்து வருவதாகவும், இது குறித்த அறிவிப்பு நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்படும் என்றும் ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.Long Distance Bus & Railபெரும் கேட்டை விளைவிக்கும் திட்டம் குறித்த இந்த செய்திகள் உண்மையா? என்பதை அரசு விளக்க வேண்டும். தமிழ்நாட்டில் 3 நிலைகளில் மது குடிப்பகங்கள் அனுமதிக்கப்படுகின்றன. அரசு மதுக்கடைகளுடன் இணைந்த குடிப்பகங்கள் எச்எல்1 என்ற உரிமத்துடனும், மனமகிழ் மன்றங்கள் என்ற பெயரிலான குடிப்பகங்கள் எச்எல்2 என்ற உரிமத்துடனும், நட்சத்திர விடுதிகளில் உள்ள குடிப்பகங்கள் எச்எல்3 என்ற உரிமத்துடனும் இயங்கி வருகின்றன.இவை அனைத்திலும் கடுமையான விதிமீறல்களும், சட்டவிரோத மது விற்பனையும் நடைபெற்று வருவதால் அவற்றை மூட வேண்டும் என்று பாமக, நலவாழ்வு ஆர்வலர்களும் தொடர்ந்து வலியுறுத்தி வரும் நிலையில் கூடுதலாக ரெஸ்டோ பார்களை அனுமதிக்கவும், அவற்றுக்காக எச்எல்3ஏ என்ற உரிமத்தை வழங்குவது குறித்து பரிசீலித்து வருவதும் பிற்போக்குத்தனமான செயல்களாகும் என்று அவர் கூறினார்



# பழனியில் மக்கள் தொகை சுய கணக்கெடுப்பு 2027: விழிப்புணர்வு முகாம் துவக்கம்!

பழனி, ஜூலை.18-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில், "மக்கள் தொகை சுய கணக்கெடுப்பு 2027", வீட்டுப் பட்டியல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பு பணிகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று சிறப்பாகத் தொடங்கியது. இவ்விழாவிற்கு பழனி சட்டமன்ற உறுப்பினர் திரு. ரவி மனோகரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, விழிப்புணர்வு நிகழ்வினை முறைப்படி கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.தேசிய அளவில் முக்கியத்துவம் வாய்ந்த இக்கணக்கெடுப்பின் அவசியத்தை பொதுமக்கள் உணரும் வகையில் இந்த விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக, பொது மக்கள் தங்கள் விவர ங்களை இணையதளம் வழியாக தாங்களாகவே பதிவு செய்யும் 'சுய கணக்கெடுப்பு' (Self-Enu-meration) முறை குறித்தும், வீடுகள் மற்றும் வீட்டுப் பட்டியலைத் துல்லியமாகத் தயாரிப்பதன் முக்கியத் துவம் குறித்தும் இந்த நிகழ்வில் அதிகாரிகளால் விளக் கப்பட்டது.இந்நிகழ்ச்சியில் பழனி வட்டாட்சியர் திரு. மங்கல பாண்டியன், நகராட்சி அதிகாரிகள், வருவாய்த்துறை அலுவலர்கள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிப் பிரமுகர்கள், பொதுமக்கள் எனப் பலர் திரளாகக் கலந்து கொண்டனர்.

# மேகமலை அருவிக்கு சுற்றுலா பயணிகள் செல்ல தடை வனத்துறை அறிவிப்பு



தேனி, ஜூலை.18-

தேனி மாவட்டம் கோம்பைதொழு அருகேயுள்ள வனப்பகுதியில் அமைந்துள்ள மேகமலை அருவிப் பகுதிக்கு இன்று (ஜூலை 17) முதல் சுற்றுலாப் பயணிகள் செல்ல வனத்துறை முற்றிலும் தடை விதித்துள்ளது. சீரமைப்புப் பணிகளுக்காக இந்த தடை விதிக்கப்படுவதாக வனத்துறை கூறி உள்ளது. மேலும் மறுசீரமைப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள் அனைத்தும் முழுமையாக முடியும் வரை, இந்த தடை தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.இது தொடர்பாக பேசியிருக்கும் வனத்துறை அதிகாரிகள், மேகமலை அருவிப் பகுதியில் பாதுகாப்புத் தடுப்புகள் சேதமடைந்து உள்ளன மற்றும் உள்கட்டமைப்புகளை சீரமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதற்கான பணிகள் தான் தற்போது துவங்கி நடைபெற்று வருகின்றன. எனவே மறுசீரமைப்பு பணிகள் முழுவதுமாக நிறைவடையும் வரை சுற்றுலா பயணிகளுக்கான இந்த தடை அமலில் இருக்கும் என கூறி உள்ளனர். இதனிடையே தடையை மீறி யாரும் அடர்ந்த வனப்பகுதிக்குள்ளோ அல்லது அருவிப் பகுதிக்குள்ளோ நுழைவதைத் தடுக்க, வனப்பகுதி சோதனைச் சாவடிகளில் கூடுதல் வனப்பணியாளர்கள் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும் இந்த தடையை மீறி ரகசியமாக அருவிப் பகுதிக்குச் செல்பவர்கள் மீது வனச்சட்டங்களின்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்

# நாகர்கோவில் மாற்றுத்திறனாளி சபரிவர்மன் உடலை வாங்க அவரது உறவினர்கள் சம்மதம்

நாகர்கோவில், ஜூலை.18-

நாகர்கோவில் சிறைச்சாலையில் அடித்துக் கொல்லப்பட்ட மாற்றுத்திறனாளி சபரிவர்மன் உடலை வாங்க அவரது உறவினர்கள் சம்மதித்துள்ளார். ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரியில் செய்யப்பட்ட அவரின் உடற்கூராய்வு குறித்த வீடியோவை பெற்று குடும்பத்தினர் தரப்பில் ஆய்வு செய்ததில் சந்தேகமும் இல்லை என்பதால் உடலை வாங்க ஒப்புதல் அளித்துள்ளனர்

# குதிரை பேரம் விவகாரம்: டிஜிபியிடம் புகார் மனு அளித்த அதிமுக நிர்வாகிகள் கூறியது என்ன?



சென்னை, ஜூலை.18-

குதிரை பேரம் விவகாரம் தொடர்பாக, அதிமுக கொறடா அக்ரி கிருஷ்ணமூர்த்தி, இன்பதுரை எம்.பி ஆகியோர் டிஜிபியிடம் புகார் மனு அளித்த னர்.பி ன்னர், செய்தியாளர்களிடம் அதிமுக கொறடா அக்ரி கிருஷ்ணமூர்த்தி கூறும்போது, "குதிரைபேர நிகழ்வுகளை தடுக்க வேண்டும் என புகார் மனு அளித்துள்ளோம். லஞ்ச ஒழிப்புத் துறை நடவடிக்கை எடுக்காததால் டிஜிபியிடம் மீண்டும் புகார் மனு கொடுத் துள்ளோம்.

தவெக அரசு 6 எம்எல்ஏக்களை விலைக்கு வாங்கிவிட்டது. எம்எல்ஏக்கள் பதவி விலகல் செய்த உடனே தவெக உறுப்பினர் அட்டை வழங்கப்படுகிறது.

அதிமுக தொண்டர்கள், நிர்வாகிகள் யாரும் செல்லவில்லை. தவெக அரசால் விலை பேசபட்ட 6 சட்டமன்ற உறுப்பினர்கள்தான் சென்றிருக்கிறார்கள். ஆட்சியைக் காப்பாற் றிக்கொள்ள குதிரை பேரம் நடக்கவில்லை என சொல்கிறார்கள். அதிமுகவில் எந்த உட்கட்சி பிரச்சினையும் இல்லை. திமுகவோடு எந்த பேச்சுவார்த்தையும் நடத்தவில்லை" என்றார்பின்னர், செய்தியாளர்களிடம் இன்பதுரை எம்.பி கூறும்போது, "தவெக எம்எல்ஏவிடம் குதிரை பேரம் நடந்தது என்ற வழக்கை தமிழக போலீஸே எப்படி விசாரிக்கலாம்? என்னுடைய வழக்கில் நானே நீதிபதியாக இருக்க முடியாது.இந்த வழக்கை சிபிஐ யிடம் வழங்க வேண்டும் என்பதே எங்கள் நிலைப்பாடு. குதிரை பேரத்தை திமுக, தவெக என யார் செய்தாலும் தவறுதான். ஏன் நாங்கள் கொடுத்த குதிரை பேர புகாரை இன்னும் விசாரிக்கவில்லை. இந்த வழக்கில் முதல்வர் விஜய்தான் குற்றவாளி. ஏனென்றால், அவர்தான் அதிமுக எம்எல்ஏக்கள் குழுமியிருந்த இடத்துக்குச் சென்றார். விஜய் சென்றதும் மர்மமான முறையில் உள்ளது. அவர் அங்கு சில சைகைளை காட்டியதாகவும், ஆசை வார்த்தைகளை கூறியதாகவும் சொல்லப்படுகிறது. அங்குள்ள சிசிடிவி காட்சிகளை வைத்து விசாரிக்க வேண்டும். தூயசக்தி ஆட்சி என்றால் வெளிப்படையாக அனைத்தையும் சொல்ல வேண்டும்" என்றார்.



# உகாண்டாவில் பள்ளி பேருந்து கவிழ்ந்து 20 மாணவர்கள் உயிரிழப்பு

உகாண்டா, ஜூலை.18-

உகாண்டாவில் பள்ளி பேருந்து விபத்துக்குள்ளானதில் 20 பள்ளி மாணவர்கள் உயிரிழந்தனர். கிழக்கு உகாண்டாவில் கல்விச்சுற்றுலா சென்ற பள்ளி பேருந்து ஒன்று ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் விழுந்ததில் 15 வயதிற்குட்பட்ட 20 மாணவர்கள் உயிரிழந்ததாக முதற்கட்ட விசாரணையில் தகவல் வெளியாகியுள்ளது




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161